பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 03 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை கேரள மாநிலம் எர்ணாகுளம் மற்றும் தமிழகத்தின் திருச்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

2. ஜல் ஜீவன் இயக்கத்தை **2028**-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3. மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா எவ்வித பாகுபாடும் இன்றி அவை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

4. வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் தடையின்றி விநியோகிக்கப்படும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

5. சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் **Basel**-லில் இன்று தொடங்கியது.

- - - இனி விரிவான செய்திகள்

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை கேரள மாநிலம் எர்ணாகுளம் மற்றும் தமிழகத்தின் திருச்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

நாளை பிற்பகல் கேரளாவின் எர்ணாகுளம் வரும் பிரதமர், 10 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

கொச்சியில் உள்ள பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தில் Polypropylene பிரிவையும் அவர் தொடங்கிவைக்க உள்ளார்.

கேரளாவில் தேசிய நெடுஞ்சாலை 66-ல் தாளபாடி செங்கலா பிரிவு ஆறுவழிச் சாலையையும், கோழிக்கோடு ஆறுவழி புறவழிச் சாலையையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்

பின்னர், தமிழகத்தின் திருச்சிக்கு வரும் பிரதமர், 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவடைந்த திட்டங்களை தொடங்கிவைத்து புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்ட உள்ளார்.

எரிசக்தி, பெட்ரோலியம், நெடுஞ்சாலை, ஊரக வளர்ச்சித் திட்டங்களை  பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

தெற்கு ரயில்வேயின் சார்பில் தமிழகத்திலிருந்து இயக்கப்படும் இரண்டு புதிய அம்ரித் பாரத் ரயில்கள், இரண்டு விரைவு ரயில்கள் மற்றும் புறநகர் ரயில் சேவையையும் பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கிவைக்கிறார்.

<<<<<<<>>>>>>>

ஜல் ஜீவன் இயக்கத்தை **2028**-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், ஜல் ஜீவன் இயக்கத்தை மறுசீரமைத்து உள்கட்டமைப்பு பணிகள் மட்டுமின்றி, சேவைகளையும் மேற்கொள்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக கூறினார்.

மத்திய அரசின் **3** லட்சத்து **59** கோடி ரூபாய் உதவியுடன், மொத்தம் **8** லட்சத்து **69** கோடி ரூபாய் செலவில் ஜல் ஜீவன் திட்டத்தை செயல்படுத்தவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்துவதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்பதல் அளித்துள்ளது.

இதனிடையே, உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டா அருகே உள்ள **Jewar** சர்வதேச விமான நிலையத்திற்கு **Green Field** இணைப்பை ஏற்படுத்துவதற்கான **3** ஆயிரத்து **630** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

<<<<<<<>>>>>>>

மக்களவை நடவடிக்கைகளை அவைத் தலைவர் திரு ஓம் பிர்லா எவ்வித பாகுபாடும் காட்டாமல் நடத்தி வருவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று அவைத்தலைவர் திரு ஓம் பிர்லாவை பதவி நீக்கம் செய்யக்கோரி எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய திரு கிரண் ரிஜிஜூ, எதிர்க்கட்சிகள் மக்களவைத் தலைவர் மீது கூறும் குற்றச்சாட்டுகள் ஏற்கும் வகையில் இல்லை என்று கூறினார்.

மக்களவைத் தலைவராக திரு ஓம் பிர்லா மிகவும் சிறப்பாக கடமையாற்றி வருகிறார் என்றும், பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார் என்றும் கேள்விநேரத்தில் அதிக அளவிலான கேள்விகளுக்கு அரசு தரப்பில் பதிலளிப்பதற்கு அவர் வழிவகுத்துக் கொடுத்தார் என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளை கணினி மயமாக்கும் திட்டத்தை செயல்படுத்த முழு மூச்சுடன் அவர் செயல்பட்டார் என்றும் கிரண் ரிஜிஜு கூறினார்.

18-ஆவது மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிக அளவில் துணைக் கேள்விகள் எழுப்புவதற்கு அவர் அனுமதி அளித்ததாகவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு அவையில் அதிக வாய்ப்புகளை திரு ஓம் பிர்லா அளித்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

கேள்விநேரத்தில் 56 சதவீத நேரம் எதிர்க்கட்சிகளுக்கு அவர் ஒதுக்கீடு செய்தார் என்றும் கிரண் ரிஜிஜு கூறினார்.

முன்னதாக, இந்த விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் முகமது **Jawed,** எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி பேசுவதற்கு, மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா அனுமதி அளிக்கவில்லை என்று கூறினார்.

மக்களவை நடவடிக்கைகளில் திரு ஓம் பிர்லா பாரபட்சமாக நடந்துகொண்டார் என்றும் குறை கூறினார்.

திமுக உறுப்பினர் திரு டி ஆர் பாலு, எதிர்க்கட்சி உறுப்பினர்களை மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா இடைநீக்கம் செய்ததாக குறை கூறினார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் **141** அரசு மருத்துவமனைகளில் சிறுநீரக நோயாளிகளுக்கான டயாலிசிஸ் சிகிச்சை வசதி செய்து தரப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த இணையமைச்சர், தற்போது ஆயிரத்து **305 Haemo** டயாலிசிஸ் கருவிகள் உள்ளதாகவும், புறநகர் பகுதிகள் மற்றும்

கிராமப்பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக டயாலிசிஸ் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டம் சுற்றுச்சூழல் அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளப்படும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் இன்று இதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்த பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி, இத்திட்டத்தால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்றும், விளைநிலங்கள் பாதிக்கப்படும் என்றும் தெரிவித்து, தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>>>

வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் தடையின்றி விநியோகிக்கப்படும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், பொதுமக்கள் இதுகுறித்து அச்சமடையத் தேவையில்லை என்றும் கூறியுள்ளார்.

போதிய அளவு எரிசக்தியை இந்தியா வெவ்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

செறிவூட்டப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு விநியோகத்தை **100** சதவீதம் உறுதி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதர நிறுவனங்களுக்கு **70** முதல் **80** சதவீதம் எரிவாயு விநியோகம் உறுதி செய்யப்படும் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

அறிவியல் மாமேதை ஜி டி நாயுடு திருவுருவச் சிலையை கோயம்புத்தூரில் தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்டுள்ள அரசின் செய்திக்குறிப்பில், **50** லட்சம் ரூபாய் செலவில் கோயம்புத்தூர் அவிநாசி பிரதான சாலையில் இந்த சிலை நிறுவப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயந்திரவியல் மற்றும் விவசாயம் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அரிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியவரும், கல்வியாளருமான ஜி டி நாயுடு-வுக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவரது திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

மேற்காசிய நாடுகளில் நிலவும் போர் சூழல் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஜெர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Johann Wadephul-**வுடன் உரையாடினார்.

இதுகுறித்து, திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துகொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு ஆப்பிரிக்க நாடான மொசாம்பிக்குக்கு தேவையான உதவிகளை இந்தியா செய்து தரும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், மனிதாபிமான அடிப்படையில் 500 டன் அரிசி மற்றும் 10 டன் அத்தியாவசியப் பொருட்கள் இந்திய கடற்படை கப்பல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடாரங்கள், மறுவாழ்வுக்கான அடிப்படைப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், சுகாதாரத்தை பாதுகாப்பதற்கான பொருட்கள் உள்ளிட்டவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**86** டன் உயிர் காக்கும் மருந்துகள் ஏற்கனவே மொசாம்பிக்குக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை மேற்கொண்டுள்ள நீதித்துறை அதிகாரிகளுக்கு தேவையான வசதிகளை மாநில அரசும், தேர்தல் ஆணையமும் செய்துதர வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை பிறப்பித்த தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதிகள் திரு மகாதேவன், திரு **Joymalya Bagchi** ஆகியோர் கொண்ட அமர்வு, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப்பணியை மேற்கொள்ளும் நீதித்துறை அதிகாரிகளுக்கு, தேர்தல் ஆணைய அதிகாரிகள் எவ்வித நிர்பந்தமும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அறிவுறுத்தியது.

<<<<<<<>>>>>>>

வீடுகள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றுக்கான சமையல் எரிவாயு தேவையை பூர்த்தி செய்யும்

வகையில் சமையல் எரிவாயு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் **Basel**-லில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், **Unnati Hooda,** சிராக் ஷெட்டி, சாத்விக் சாய்ராஜ், **Treesa Jolly, Gayatri Gopichand, Hariharan Amsakarunan, Arjun** உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

**<<<<<<<END>>>>>>>**